தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 10-1-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஜனவரி 2013 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு - கட்டுப்பாட்டு முறைகள்

ஜனவரி மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து இப்பல்கலைக்கழக பயிர்ப்பாதுகாப்பு மையத்தின் அறிக்கை பின்வருமாறு:

### நெற்பயிர்

கோயம்புத்தூர், சேலம், புதுக்கோட்டை, திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் நெல் பயிரில் இலைச் சுருட்டுப்புழு, தண்டுப்புழுவின் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த வயல்களில் விளக்குப் பொறி ஏக்கருக்கு 1 அமைத்து அந்திப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கவும். பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக காணப்பட்டால் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் 25 கிலோ எக்டருக்கு அல்லது பின்வரும் ஏதாவது ஒரு மருந்தினை புரோபினோபாஸ் 50 இசி 1000 மில்லி அல்லது பாசலோன் 35 இசி 1500 மில்லி எக்டருக்குத் தெளிக்கவும்.

நெல்லில் இலைப்புள்ளி நோயின் தாக்குதல் கோயம்புத்தூர், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பரவலாகத் தென்படுகிறது. விவசாயிகள் மான்கோசோப் மருந்தை (2 கிராம் 1 லிட்டர் தண்ணிருக்கு) தேவைக்கு ஏற்ப 2 அல்லது 3 முறை 10-15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும்.

பாக்டீரியா இலைகருகல் நோய் புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த தேவைப்பட்டால் கோசைடு 101 @ 2.5 கிராம் ஒரு லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கவும்.

### பருத்தி

அமெரிக்கன் காய்ப் புழுவின் தாக்குதல் தர்மபுரி, திருநெல்வேலி மற்றும் மதுரை மாவட்டங்களில் காணப்படுகின்றன. இவற்றை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறிகளை

ஏக்கருக்கு 5 வைத்து அந்திப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம். தேவைப்பட்டால் குளோர்பைரிபாஸ் 25 இசி – 2 லிட்டர் அல்லது பாசலோன் 35 இசி – 1.5 லிட்டர் ஒரு எக்டருக்கு தெளிக்க வேண்டும்.

பருத்தி செடியில் சாறு உறிஞ்சும் தத்துப் பூச்சிகளின் தாக்கம் சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் காணப்படுகின்றன. விவசாயிகள் இவற்றின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும் தேவைப்படின் (500 லிட்டர் தண்ணிர் ஒரு ஏக்கடருக்கு) மிதைல் டிமட்டான் 25 இசி 500 மில்லி அல்லது இமிடோகுளோபிரிட் 200 எஸ்.எல் 100 மில்லி ஒரு எக்டருக்கு தெளிக்கவும்.

*__நிலக்கடலை__*

நிலக்கடலைப் பயிரில் இலைச்சுருட்டுப்புழுவின் தாக்குதல கோயம்புத்தூர், சேலம், மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் காணப்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு ஒரு விளக்குப்பொறி வைத்து அந்திப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கவும். தேவைப்பட்டால் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் தெளிக்கவும்.

நிலக்கடலையில் டிக்கா இலைப்புள்ளி நோய் மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் தென்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த கார்பன்டசிம் (0.1 சதம்) அல்லது மான்கோசாப் (0.2 சதம்) அல்லது குளோர்தலானில் (0.2 சதம்) தெளிக்கவும்.

*__மாவுப் பூச்சி__*

மரவள்ளி, பப்பாளி மற்றும் மல்பெரி பயிர்களில் உள்ள மாவுப் பூச்சியின் தாக்குதலை ஒட்டுண்ணிகள் மூலம் கட்டுப்படுத்தலாம். இதற்காக அருகிலுள்ள இப்பல்கலைக்கழகக் கல்லூரி, வேளாண் ஆராய்ச்சி நிலையம் அல்லது லேளாண் அறிவியல் மையத்தினை அணுகி ஒட்டுண்ணிகளை இலவசமாக பெற்று மாவுப் பூச்சியின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.

மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள:

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வேளாண் பூச்சியியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611214

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பயிர் நோயியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611226

மக்கள் தொடர்பு அலுவலர்